**1)** எட்டுத்தொகை நூல்களுள் முதன் முதலாக தொகுக்கப்பட்ட நூல்

A) அகநானூறு

B) நற்றிணை

C) குறுந்தொகை

D) கலித்தொகை

E) விடை தெரியவில்லை

**2)** பிழையற்ற தொடர் எது?

A) ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.

B) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.

C) நம் மாநிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது

D) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

E) விடை தெரியவில்லை

**3)** எட்டுத்தொகை நுல்களுள் காலத்தால் முந்தையது?

A) அகநானூறு

B) புறநானூறு

C) பதிற்றுப்பத்து

D) கலித்தொகை

E) விடை தெரியவில்லை

**4)** இன்பத்தமிழ் - பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக:

(i) கவிதைக்கு - 1. வேல்

(ii) அசதிக்கு - 2. தேன்

(iii) புகழுக்கு - 3. வாள்

(iv) வாழ்வுக்கு - 4. நீர்

(v) வளர்ச்சி - 5. ஊர்

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 | 5 |
| B) | 2 | 3 | 4 | 5 | 1 |
| C) | 2 | 1 | 3 | 5 | 4 |
| D) | 3 | 2 | 1 | 5 | 4 |

E) விடை தெரியவில்லை

**5)** அஃறிணைக்குரிய வேற்றுமை உருபு?

A) கு

B) இன்

C) அது

D) ஐ

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**6)** தமிழரின் கலை, நாகரிகம், பண்பாடு முதலானவற்றை உள்ளடக்கிய கருவூலமாக திகழும் காப்பியம்?

A) சிலப்பதிகாரம்

B) வளையாபதி

C) சிந்தாமணி

D) மணிமேகலை

E) விடை தெரியவில்லை

**7)** தமிழர் வரலாற்றுக் களஞ்சியம் என்று அழைக்கப்படும் நூல்?

A) புறநானூறு

B) தொல்காப்பியம்

C) திருக்குறள்

D) அகநானூறு

E) விடை தெரியவில்லை

**8)** நெஞ்சாற்றுப்படை என்று அழைக்கப்படும் நூல்?

A) மதுரைக்காஞ்சி

B) மலைபடுகடாம்

C) முல்லைப்பாட்டு

D) பெரும்பாணாற்றுப்படை

E) விடை தெரியவில்லை

**9)** 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

A) எருது

B) குதிரை

C) நாய்

D) யாழி

E) விடை தெரியவில்லை

**10)** சரியான நிறுத்தக்குறியுடைய சொற்றொடரைக் கண்டுபிடிக்க.

A) மலரவன் தன் பாட்டியிடம் நான் படிக்கிறேன் என்றான்.

B) மலரவன், தன் பாட்டியிடம், "நான் படிக்கிறேன்" என்றான்.

C) மலரவன் தன் பாட்டியிடம், "நான் படிக்கிறேன்" என்றான்.

D) மலரவன் தன் பாட்டியிடம், நான் படிக்கிறேன்! என்றான்.

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**11)** பாணாறு என்று அடைமொழியால் குறிப்பிடப்படும் நூல்?

A) பெரும்பாணாற்றுப்படை

B) கூத்தராற்றுப்படை

C) சிறுபாணாற்றுப்படை

D) பரிப்பாடல்

E) விடை தெரியவில்லை

**12)** இயற்கைத் தவம் என்ற அடைமொழியால் குறிப்பிடப்படும் நூல்?

A) வளையாபதி

B) சிலப்பதிகாம்

C) மணிமேகலை

D) சீவகசிந்தாமணி

E) விடை தெரியவில்லை

**13)** நற்றிணையை தொகுப்பித்தவர்?

A) பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

B) யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

C) பாண்டியன் உக்கிரப்பெருவழுதி

D) அறியப்படவில்லை

E) விடை தெரியவில்லை

**14)** "வியர்வைமுத்துக்கள்" என்ற சொல்லின் இலக்கணம்?

A) உள்ளுறை உவமம்

B) இறைச்சி

C) உருவகம்

D) உவமை

E) விடை தெரியவில்லை

**15)** உயிர் இல்லாத பொருள்களை உயிர் உள்ளன போலவும், உணர்வு இல்லாத பொருள்களை உணர்வுடையன போலவும் கற்பனை செய்து எழுதுவது இக்காலத்தில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) இலக்கணம்

B) இலக்கணப்போலி

C) மரூஉ

D) இலக்கணை

E) விடை தெரியவில்லை

**16)** மலை வாழ்வார் - இலக்கணக்குறிப்பு அறிக

A) மூன்றாம் வேற்றுமைத் தொகை

B) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை

C) ஏழாம் வேற்றுமைத் தொகை

D) ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை

E) விடை தெரியவில்லை

**17)** முசிறி - யாருடைய புகழ்வாய்ந்த துறைமுகம் ஆகும்?

A) சேரர்

B) சோழர்

C) பாண்டியர்

D) பல்லவர்

E) விடை தெரியவில்லை

**18)** பொருந்தாத இணை எது?

A) விளை - உண்டாக்குதல்

B) விழை - விரும்பு

C) இளை - செடி

D) இழி நூல் இழை

E) விடை தெரியவில்லை

**19)** _____ வெண்பா மட்டும் பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும்.

A) கலிவெண்பா

B) பஃறொடை வெண்பா

C) சிந்தியல் வெண்பா

D) இன்னிசை வெண்பா

E) விடை தெரியவில்லை

**20)** பின்வனவற்றுள் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் நூல் அல்லாதது எது?

A) மாங்கனி

B) கொய்யாக்கனி

C) பாவியக்கொத்து

D) நூறாசிரியம்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**21)** தமிழன் என்ற சொல் முதன் முதலில் இடம் பெற்ற நூல் எது?

A) நற்றிணை

B) திருவாசகம்

C) தேவாரம்

D) குறுந்தொகை

E) விடை தெரியவில்லை

**22)** வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

A) பதிற்றுப்பத்து

B) பரிபாடல்

C) குறுந்தொகை

D) அகனாநூறு

E) விடை தெரியவில்லை

**23)** பொற்கோட்டு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

A) பொன் + கோட்டு

B) பொற் + கோட்டு

C) பொண் + கோட்டு

D) பொற்கோ + இட்ட

E) விடை தெரியவில்லை

**24)** பாரதி பராசக்தியிடம் வேண்டியதை பொருத்துக.

(i) முத்துச்சுடர்போல - 1. மாடங்கள்

(ii) தூய நிறத்தில் - 2. தென்றல்

(iii) சித்தம் மகிழ்ந்திட - 3. நிலாஒளி

| | (i) | (ii) | (iii) |
|---|---|---|---|
| A) | 3 | 1 | 2 |
| B) | 2 | 3 | 1 |
| C) | 2 | 1 | 3 |
| D) | 1 | 2 | 3 |

E) விடை தெரியவில்லை

**25)** பாரதி என்னும் பட்டம் யாரால் வழங்கப்பட்டது?

A) திருவிதாங்கூர் மன்னர்

B) எட்டையபுர மன்னர்

C) திருமலை நாயக்கர்

D) எட்டப்ப மன்னர்

E) விடை தெரியவில்லை

**26)** பின்வருவனவற்றுள் ஆய்த எழுத்திற்கு வழங்கப்படாத பெயர்?

A) முப்புள்ளி

B) முப்பாற்புள்ளி

C) முக்கோணப்புள்ளி

D) தனிநிலை & அ:.கேனம்

E) விடை தெரியவில்லை

**27)** இவற்றுள் திருவள்ளுவரின் சிறப்புப்பெயர் அல்லாதது எது?

A) வான்புகழ் வள்ளுவர்

B) புதுநெறி கண்ட புலவர்

C) தெய்வப்புலவர்

D) பொய்யில் புலவர்

E) விடை தெரியவில்லை

**28)** ஔடதம் என்ற சொல்லின் பொருள் என்ன?

A) அமிழ்தம்

B) மருந்து

C) உணவு

D) இனிப்பு

E) விடை தெரியவில்லை

**29)** தன்னை பெருமகிழ்ச்சியில் ஆழ்த்திய தனது சாதனையாக அப்துல்கலாம் குறிப்பிடுவது எதை?

A) போலியோ பாதித்தவர்களுக்கான செயற்கை கால்கள்

B) போக்ரான் அணுகுண்டு சோதனை

C) ஐ.நாவில் ஆற்றிய உரை

D) குடியரசுத்தலைவராகியது

E) விடை தெரியவில்லை

**30)** "Homograph" என்ற சொல்லுக்கு இணையான தமிழ்சொல் எது?

A) மெய்யெழுத்து

B) அச்செழுத்து

C) ஒப்பெழுத்து

D) ஓவிய எழுத்து

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**31)** பொருந்தாத சொல்லைத் தேர்க

A) ஹைக்கூ

B) சென்ரியு

C) லிமரைக்கூ

D) யாப்பு

E) விடை தெரியவில்லை

**32)** மரபுப் பெயர்களில் தவறானது?

A) எருது எக்காளமிடும்

B) பசு கதறும்

C) பூனை சீறும்

D) வண்டு ரீங்காரமிடும்

E) விடை தெரியவில்லை

**33)** இளமைப் பெயர்களில் தவறானது?

A) கழுதைக் கன்று

B) மான் கன்று

C) எருமைக் கன்று

D) யானைக் கன்று

E) விடை தெரியவில்லை

**34)** ஒரு விரலைக் காட்டிச் "சிறியதோ? பெரியதோ" என்று கேட்டல் - எவ்வழுவாகும்?

A) திணை வழுவமைதி

B) வழாநிலை வழுவமைதி

C) விடை வழுவமைதி

D) வினா வழுவமைதி

E) விடை தெரியவில்லை

**35)** "பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்" என்றத் தொடரில் பயின்றுவந்துள்ள இயைபு வகை

A) கீழ்க்கதுவாய் இயைபு

B) மேற்கதுவாய் இயைபு

C) முற்று இயைபு

D) கூழை இயைபு

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**36)** சிலப்பதிகாரம் காட்டும் "பாசவர்" யார்?

A) வெற்றிலை விற்பவர்கள்

B) நறுமணப் பொருட்களை விற்பவர்

C) பல்வகை இறைச்சிகளை விலைகூறி விற்பவர்கள்

D) எண்ணெய் விற்போர்

E) விடை தெரியவில்லை

**37)** "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" - உவமை உணர்த்தும் கருத்து யாது?

A) கருணையன் கடவுளைக் காணாது வாடுகிறான்

B) கருணையன் தன் தாயை இழந்து வாடுகின்றான்.

C) கருணையன் கடவுளைக் கண்டு மகிழ்கிறான்

D) கருணையன் தாயைக் கண்டு பரவசமடைகிறான்

E) விடை தெரியவில்லை

**38)** பொருந்தா காமத்தைக் குறிக்கும் திணை என்ன?

A) கைக்கிளை

B) பெருந்திணை

C) பொதுவியல்

D) பாடாண்

E) விடை தெரியவில்லை

**39)** பூட்கை என்ற சொல்லின் பொருள்?

A) குறிக்கோள்

B) கொள்கை

C) மனஉறுதி

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

**40)** ___________ ஆணையம் அமைக்கப்பட்டு , திருத்தணி வரையுள்ள தமிழ் நிலங்கள் மீட்கப்பட்டன.

A) படாஸ்கர் ஆனையம்

B) சர்தார் கே.எம்.பணிக்கர்

C) நீதிபதி வாஞ்சு ஆணையம்

D) பசல் அலி ஆணையம்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**41)** மார்ஷல் நேசமணியின் நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு அவருக்கு சிலையோடு மணிமண்டபமும் அமைத்துள்ள இடம்?

A) நாகர்கோயில்

B) கன்னியாகுமரி

C) விருதுநகர்

D) சென்னை

E) விடை தெரியவில்லை

**42)** கு.ப.ராவின் மறைவிற்குப் பின்னர் அவரது படைப்புகளுள் நூல்களாகத் தொகுக்கப்பட்டவை?

A) அகலிகை, ஆத்மசிந்தனை

B) மணல்கயிறு, மோகமுள்

C) கோடை வயல், மீட்சி விண்ணப்பம்

D) ஏர் புதிதா, கு.ப.ரா படைப்புகள்

E) விடை தெரியவில்லை

**43)** கல் பொறிப்புகளைப் பொருத்தவரை சரியான இணை எது?

A) பல்லவர்கள் - கல்வெட்டுகள்

B) பாண்டியர்கள் - செப்பேடுகள்

C) சொழர்கள் - மெய்கீர்த்திகள்

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

**44)** கோப்பரகேசரி, திருபுவனச் சக்கரவர்த்தி என்றெல்லாம் அழைக்கப்பட்ட சோழ மன்னன் யார்?

A) சுந்தர சோழன்

B) இரண்டாம் குலோத்துங்கன்

C) இரண்டாம் ராசராசன்

D) கண்டராதித்தன்

E) விடை தெரியவில்லை

**45)** "பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு / கூலம் குவித்த கூல வீதியும்" - என்ற சிலப்பதிகாரப் பாடலில், கூலம் என்றுக் குறிப்பிடப்படுவது?

A) பட்டு

B) பவளம்

C) தானியம்

D) நெல்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**46)** வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறுபணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்ய கிருஷ்ணம்மாள் ஜெகன்நாதன் தொடங்கிய இயக்கம்?

A) பூமிதான இயக்கம்

B) உழுபவருக்கே நில உரிமை இயக்கம்

C) மண்ணுரிமை இயக்கம்

D) சர்வோதைய இயக்கம்

E) விடை தெரியவில்லை

**47)** புறப்பொருள் வெண்பமாலை குறிப்பிடும் புறப்பொருள்கள் எத்தனை?

A) 7

B) 5

C) 10

D) 12

E) விடை தெரியவில்லை

**48)** ஈயாமை இழிவு, இரப்போர்க்கு ஈயாது வாழ்தலை விட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்று எந்த அக இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது?

A) கலித்தொகை

B) ஐங்குறுநூறு

C) பதிற்றுப்பத்து

D) நற்றிணை

E) விடை தெரியவில்லை

**49)** 'அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்' என அறம் கூறு அவையத்தைப் பற்றிக் கூறும் நூல் எது?

A) சிலப்பதிகாரம்

B) மணிமேகலை

C) புறநானூறு

D) மதுரைக்காஞ்சி

E) விடை தெரியவில்லை

**50)** தலைமுறைக்கு ஒருமுறை மட்டுமே மலர்வது

A) பிரம்ம கமலம்

B) செண்பகம்

C) குறிஞ்சி

D) மூங்கில்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**51)** இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடிவரவழைத்தல் யாரின் இயல்பு என நச்செள்ளையார் கூறுகிறார்?

A) அதியன்

B) பேகன்

C) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

D) மலையமான் திருமுடிக்காரி

E) விடை தெரியவில்லை

**52)** சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக்காப்பியங்கள் என்று அழைக்கப்படுவதன் காரணம்?

A) அவற்றிற்கிடையே கதைத் தொடர்பு உள்ளதால்

B) இரண்டும் பெண்மையை முன்னிருத்துவதால்

C) இரண்டும் அரசகுடியல்லாதவர்களை கதைமாந்தர்களாகக் கொண்டதால்

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

**53)** ஜெயகாந்தன் தனது எந்த திரைப்படத்திற்காக குடியரசுத் தலைவர் விருது பெற்றார்?

A) ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்

B) உன்னைப்போல் ஒருவன்

C) சிலநேரங்களில் சில மனிதர்கள்

D) ஊருக்கு நூறு பேர்

E) விடை தெரியவில்லை

**54)** உதவி செய்தலை உதவியாண்மை என்று குறிப்பிடுபவர்?

A) பெருஞ்சித்திரனார்

B) நல்வேட்டனார்

C) நல்லந்துவனார்

D) ஈழத்துப் பூதன் தேவனார்

E) விடை தெரியவில்லை

**55)** முன்சி பிரேம்சந்தின் வாழ்க்கை வரலாறை ஜெயகாந்தன் எப்பெயரில் தமிழுக்கு மொழிபெயர்த்தார்?

A) முன்சி பிரேம்சந்தின் கதை

B) ஒரு எளிய மனிதனின் கதை

C) ஒரு கதாசிரியனின் கதை

D) கதைகளின் கதை

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**56)** கைமுறை என்பதன் இலக்கணக்குறிப்பு அறிக

A) வேற்றுமைத்தொகை

B) பண்புத்தொகை

C) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

D) வினைத்தொகை

E) விடை தெரியவில்லை

**57)** பின்வரும் எது வீரமாமுனிவரின் நூலாகும்?

A) கிழவனும் கடலும்

B) பரமார்த்த குரு கதைகள்

C) புயலிலே ஒரு தோணி

D) இயேசு காவியம்

E) விடை தெரியவில்லை

**58)** நாகூர் ரூமியின் இயற்பெயர் என்ன?

A) ஜவாகிருல்லா

B) முகமது ர.ஃபி

C) பீர் முகமது

D) முசா.ஃபர் அலி

E) விடை தெரியவில்லை

**59)** கண்ணகியையும் கோவலனையும் மதுரைக்கு அழைத்துச்சென்றவர்?

A) சீத்தலை சாத்தனார்

B) அறவண அடிகள்

C) கவுந்தியடிகள்

D) சபரி கிழவி

E) விடை தெரியவில்லை

**60)** யாருடைய திருக்குறள் மெய்ப்பொருளுரை தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது?

A) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

B) மு.வரதராசனார்

C) இரா.இளங்குமாரனார்

D) க.அப்பாதுரையார்

E) விடை தெரியவில்லை

**61)** குறிஞ்சிமலர் என்ற நூலின் ஆசிரியர்?

A) ந.பிச்சமூர்த்தி

B) கி.ராஜநாராயணன்

C) நாகசாமி

D) நா.பார்த்தசாரதி

E) விடை தெரியவில்லை

**62)** "அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்" எனத்துவங்கும் திருக்குறளில் செயலை முயற்சியுடன் முடிப்பது எதைத் தரும் என்கிறார் வள்ளுவர்?

A) சோர்வு

B) செல்வம்

C) ஊக்கம்

D) பெருமை

E) விடை தெரியவில்லை

**63)** தாம் யாருடைய கூத்தர்கள் என்று சொன்னால் மக்கள் நெய்யில் வெந்த மாமிசப் பொரியல் மற்றும் தினை சோறு ஆகியவற்றை உணவாக இடுவர் என்று மலைபடுகடாம் கூறுகிறது?

A) ஆய் அண்டிரன்

B) வல்வில் ஓரி

C) நன்னன்

D) பேகன்

E) விடை தெரியவில்லை

**64)** துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றைப் பாடுவதாக அமைந்துள்ள நூல்?

A) நறுந்தொகை

B) நைடதம்

C) மணிமேகலை

D) காசிக்காண்டம்

E) விடை தெரியவில்லை

**65)** பூ வாடிய நிலையைக் குறிக்கும் சொல்?

A) போது B) அலர் C) வீ D) செம்மல்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**66)** "விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண மேன்மேலும் முகமலரும் மேலோர் போல" - என்று விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியவர் யார்?

A) கம்பர்

B) செயங்கொண்டார்

C) நப்பூதனார்

D) பெருங்கௌசிகனார்

E) விடை தெரியவில்லை

**67)** விருந்தினரை வழியனுப்பும்போது அவர்களின் தேர்வரை 7 அடி நடந்துசென்று வழியனுப்பினர் என்ற செய்தி காணப்படும் நூல்?

A) பொருநராற்றுப்படை

B) கூத்தராற்றுப்படை

C) பெரும்பாணாற்றுப்படை

D) சிறுபாணாற்றுப்படை

E) விடை தெரியவில்லை

**68)** நறுந்தொகை என்று அழைக்கப்படும் நூல் எது?

A) நைடதம்

B) வாயுசம்கிதை

C) கூர்மபுராணம்

D) வெற்றிவேட்கை

E) விடை தெரியவில்லை

**69)** சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின் / உறுதுயர் அலமரல்... என்ற முல்லைப்பாட்டு பாடலில் வெளிப்படும் உரிப்பொருள்?

A) காத்தலும் காத்தல் நிமித்தமும்

B) ஊடலும் ஊடல் நிமித்தமும்

C) இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

D) கூடலும் கூடல் நிமித்தமும்

E) விடை தெரியவில்லை

**70)** கோபல்லபுரத்து மக்கள் என்றக் கதை எதை பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டது?

A) ஜல்லிக்கட்டு

B) இந்திய விடுதலைப் போராட்டம்

C) மானாவாரி விவசாய நிலங்கள்

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**71)** சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம் - என்பது யார் கூற்று?

A) பாம்பாட்டிச்சித்தர்

B) சிவவாக்கியர்

C) திருமூலர்

D) பட்டினத்தார்

E) விடை தெரியவில்லை

**72)** வில்லிபாரதம் எத்தனை விருத்தப்பாக்களால் ஆனது?

A) 5027

B) 4321

C) 3615

D) 10589

E) விடை தெரியவில்லை

**73)** தமிழில் எழுதப்பட்ட முதல் இரண்டு காப்பியங்கள்?

A) கம்பராமாயணம், பெரியபுராணம்

B) வளையாபதி, சீவக சிந்தாமணி

C) குண்டலகேசி, நீலகேசி

D) சிலப்பதிகாரம், மணிமேகலை

E) விடை தெரியவில்லை

**74)** சாகித்ய அகாதெமி விருது பெற்ற அப்துல்ரகுமானின் நூல் யாது?

A) முட்டைவாசிகள்

B) ஆலாபனை

C) சுட்டுவிரல்

D) குணங்குடியார் பாடற்கோவை

E) விடை தெரியவில்லை

**75)** உடை அணிந்தேன் - இலக்கனக்குறிப்பு அறிக

A) ஐந்தாம் வேற்றுமைத்தொகை

B) நான்காம் வேற்றுமைத்தொகை

C) மூன்றாம் வேற்றுமைத்தொகை

D) இரண்டாம் வேற்றுமைத்தொகை

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**76)** "பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்" என்று குறிப்பிடும் காப்பியம்?

A) கம்பராமாயணம்

B) மணிமேகலை

C) வளையாபதி

D) நீலகேசி

E) விடை தெரியவில்லை

**77)** "பெண்மை வெல்க என்று கூத்திடுவோம்" - என்று பாடியவர்?

A) முடியரசன்

B) பாரதியார்

C) பாரதிதாசன்

D) கவிமணி

E) விடை தெரியவில்லை

**78)** "சேரதாண்டவம்" காப்பியத்தை இயற்றியவர்?

A) புலவர் குழந்தை

B) முடியரசன்

C) சுத்தானந்த பாரதி

D) பாரதிதாசன்

E) விடை தெரியவில்லை

**79)** "பசுவைய்யா" என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதியவர்?

A) பிரமிள்

B) வண்ணநிலவன்

C) சுந்தரராமசாமி

D) கலாப்ரியா

E) விடை தெரியவில்லை

**80)** புறநானூற்றை, 1894ஆம் ஆண்டு முதன்முதலில் அச்சில் பதிப்பித்தவர் யார்?

A) உ.வே.சாமிநாதர்

B) நச்சினார்க்கினியர்

C) சி.வை.தாமோதரனார்

D) அயோத்திதாசர்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**81)** கவிஞர் தமிழ்நதியின் இயற்பெயர் என்ன?

A) இராஜலட்சுமி

B) கலைவாணி

C) விஜயரங்கம்

D) மதுசூதனன்

E) விடை தெரியவில்லை

**82)** 1995ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசை வென்ற இறையன்பு அவர்களின் கவிதை நூல் எது?

A) ஏழாவது அறிவு

B) வாய்க்கால் மீன்கள்

C) உள்ளொளிப் பயணம்

D) மூளைக்குள் சுற்றுலா

E) விடை தெரியவில்லை

**83)** நடுங்கும்படியான துன்பம் யாருக்கில்லை?

A) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ள கூடியவர்

B) மனத்திட்பம் உடையவர்

C) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்

D) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்

E) விடை தெரியவில்லை

**84)** திண்ணியர் என்பதன் பொருள் தருக.

A) அறிவுடையார்

B) மன உறுதியுடையவர்

C) தீக்காய்வார்

D) அறிவினார்

E) விடை தெரியவில்லை

**85)** அழிவு வராமல் காக்கும் கருவிமட்டுமல்ல, பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணும் எதுவே ஆகும் என்கிறார் வள்ளுவர்?

A) அறிவு

B) அறம்

C) அன்பு

D) அடக்கம்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**86)** தவறான இணையைத் தேர்க

A) விருத்தப்பா - நாலடியார்

B) ஆசிரியப்பா - அகநானூறு

C) கலிவெண்பா - தூது

D) குறள்வெண்பா - திருக்குறள்

E) விடை தெரியவில்லை

**87)** கவிமணி இயற்றிய காப்பியம்?

A) ஆசிய ஜோதி

B) மருமக்கள் வழி மானியம்

C) மலரும் மாலையும்

D) கதர் பிறந்த கதை

E) விடை தெரியவில்லை

**88)** "சிதம்பர ஸ்மரண" என்ற நூலை, "சிதம்பர நினைவுகள்" என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்தவர்?

A) கே. வி. ஜெயஸ்ரீ

B) கே.வி.சைலஜா

C) யவனிகா ஸ்ரீராம்

D) டாக்டர் ஸ்ரீராம்

E) விடை தெரியவில்லை

**89)** சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளை, 'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்' என்று குறிப்பிடுபவர்?

A) பாரதியார்

B) சுரதா

C) இரா.பி.சேது

D) பாரதிதாசன்

E) விடை தெரியவில்லை

**90)** தென்னிந்தியாவின் நுழைவாயில்?

A) சென்னை

B) சிரவணபெலகொலா

C) ஹைதராபாத்

D) தூத்துக்குடி

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**91)** சுரதா நடத்திய இலக்கிய ஏடுகளில் சேராதது?

A) இலக்கியம்

B) விண்மீன்

C) ஊர்வலம்

D) கவி

E) விடை தெரியவில்லை

**92)** வை.மு.கோதைநாயகி அம்மையார் 35 ஆண்டுகள் தொடர்ந்து நடத்திய இதழ்?

A) பால பாரதம்

B) ஜெகன் மோகினி

C) சுதேச மித்திரன்

D) பாலசுதா

E) விடை தெரியவில்லை

**93)** கவிஞர் நகுலனின் இயற்பெயர் என்ன?

A) சொ.விருதாச்சலம்

B) அரவிந்தன்

C) மதுசூதனன்

D) டி.கே. துரைசாமி

E) விடை தெரியவில்லை

**94)** வே.மாலி என்ற புனைப்பெயரில் எழுதியவர்?

A) ந.பிச்சமூர்த்தி

B) சி. மணி

C) முடியரசன்

D) கண்ணதாசன்

E) விடை தெரியவில்லை

**95)** இந்தியாவின் முதல் பொது நூலகம்?

A) சென்னை ஜார்ஜ் கோட்டை நூலகம்

B) கன்னிமாரா நூலகம்

C) திருவனந்தபுரம் நூலகம்

D) கீழ்த்திசை சுவடிகள் நூலகம்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**96)** நெய்தல் திணையைப் பாடுவதில் வல்லவர்?

A) ஓரம்போகியார்

B) பேயனார்

C) அம்மூவனார்

D) கபிலர்

E) விடை தெரியவில்லை

**97)** மரபுப் பிழையற்ற தொடர் எது?

A) வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன

B) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.

C) கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.

D) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குருளையும், யானைக் கன்றையும்கண்டேன்.

E) விடை தெரியவில்லை

**98)** இரட்சணிய யாத்திரிகம் எத்தனைப் பாடல்களைக் கொண்ட ஒரு பெரும் உருவகக் காப்பியம் ஆகும்?

A) 3766

B) 2766

C) 4766

D) 5766

E) விடை தெரியவில்லை

**99)** ஓர்மின் என்றால் என்ன?

A) ஆராய்தல்

B) கூடுதல்

C) தனித்து செல்லுதல்

D) இரைச்சல்

E) விடை தெரியவில்லை

**100)** "மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் மன்னனின் கற்றோன் சிறப்புடையன்" - என்னும் பாடல் இடம் பெற்ற நூல்?

A) கொன்றை வேந்தன்

B) ஆத்திசூடி

C) மூதுரை

D) நல்வழி

E) விடை தெரியவில்லை

**101)** கயத்தாறு கோட்டையில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட நாள்?

A) 1799 அக்டோபர் 17

B) 1799 அக்டோபர் 16

C) 1799 அக்டோபர் 18

D) 1799 அக்டோபர் 19

E) விடை தெரியவில்லை

**102)** தென்னிந்திய கிளர்ச்சியாளர்களின் கூட்டமைப்பு வெளியிட்ட பிரகடனம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) திண்டுக்கல் அறிக்கை

B) திருநெல்வேலி அறிக்கை

C) பாளையக்காரர்கள் அறிக்கை

D) திருச்சிராப்பள்ளி அறிக்கை

E) விடை தெரியவில்லை

**103)** பூண்டியில் சத்தியமூர்த்தியால் கட்டப்பட்ட நீர்த்தேக்கத்தை திறந்து வைத்தவர் யார்?

A) காமராசர்

B) இராஜகோபாலாச்சாரி

C) பக்தவச்சலம்

D) ஓமந்தூரார்

E) விடை தெரியவில்லை

**104)** மகாதேவ் கோவிந்த் ரானடே அவர்களால் "புனே சர்வஜனிக் சபா" நிறுவப்பட்ட ஆண்டு என்ன?

A) 1856

B) 1867

C) 1870

D) 1876

E) விடை தெரியவில்லை

**105)** தயானந்த சரஸ்வதியை, 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இந்திய மறுமலர்ச்சியின் தந்தையென போற்றுபவர் யார்?

A) இரவீந்திரநாத் தாகூர்

B) மகாத்மா காந்தி

C) பக்கிம் சந்திர சட்டர்ஜி

D) தேவேந்திரநாத் தாகூர்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**106)** “தெலுங்கு மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை“ என்று அழைக்கப்பட்டவர் யார்?

A) கந்துகூரி வீரேசலிங்கம்

B) அய்யன்காளி

C) பொட்டி சீதாராமய்யா

D) நாராயண குரு

E) விடை தெரியவில்லை

**107)** தாழ்த்தப்பட்டோருக்குக் கல்வி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஜோதிபா பூலே எக்குழுவிடம் அறிக்கை சமர்ப்பித்தார்?

A) கீழ்த்திசைக் கல்விக்குழு

B) மெக்காலேகுழு

C) ஹண்டர் குழு

D) தாமஸ் மன்றோ குழு

E) விடை தெரியவில்லை

**108)** ஆரிய மகிளா சமாஜ் எனும் அமைப்பை நிறுவியவர் யார்?

A) பண்டித ஜோதாபாய்

B) பண்டித ரமாபாய்

C) பண்டித பண்டரிபாய்

D) பண்டித சாரதாபாய்

E) விடை தெரியவில்லை

**109)** சுரேந்திரநாத் பானர்ஜி ______ என்னும் செய்திப்பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

A) ராஸ்ட் கோப்தார்

B) பெங்காலி

C) வாய்ஸ் ஆஃப் இந்தியா

D) இந்தியாவின் குரல்

E) விடை தெரியவில்லை

**110)** சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக 1877இல் நியமிக்கப்பட்டவர் யார்?

A) G. சுப்பிரமணியம்

B) T. முத்துசாமி

C) M. வீரராகவாச்சாரி

D) C. வைத்தியநாதன்

E) விடை தெரியவில்லை



ETW ACADEMY

**111)** சூர் இடைவெளி என்று அறியப்படும் காலம்?

A) 1540 - 1555

B) 1545 - 1555

C) 1540 - 1545

D) 1545 - 1550

E) விடை தெரியவில்லை

**112)** செல்வம் கொழித்த நகரம் என்று அறியப்படும் இடம்?

A) ஆக்ரா

B) குஜராத்

C) தௌலதாபாத்

D) லாஹூர்

E) விடை தெரியவில்லை

**113)** அலகாபாத் தூண் கல்வெட்டு யாருடைய ஆட்சி பற்றி குறிப்பிடுகிறது?

A) சமுத்திரகுப்தர்

B) இரண்டாம் சந்திரகுப்தர்

C) இரண்டாம் சமுத்திரகுப்தர்

D) சந்திரகுப்த மௌரியர்

E) விடை தெரியவில்லை

**114)** டெல்லி சுல்தானியத்தின் மாகாண ஆளுநர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

A) முக்காடம்

B) மன்சப்தாரி

C) குபிலியாத்

D) முக்திக்கள்

E) விடை தெரியவில்லை

**115)** டெல்லி சுல்தானியத்தின் நீதித்துறை _____ என அழைக்கப்பட்டது

A) திவானி விசாரத்

B) திவானி அர்ஸ்

C) திவானி ரிசாலத்

D) காஸி - உல் - கஸாத்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**116)** விசிஷ்டாத்வைதத்தை உலகிற்களித்தவர்?

A) இராமானுஜர்

B) மத்துவர்

C) வசிஷ்டர்

D) ஆதிசங்கரர்

E) விடை தெரியவில்லை

**117)** சமண சமய நூல்களான 12 அங்கங்கள் தொகுத்தளிக்கப்பட்ட சமண சமய மாநாட்டிற்கு தலைமை வகித்தவர்?

A) தேவாதி க்ரஷ்மர்மனா

B) புஷ்பதந்தர்

C) நேமிநாதர்

D) ஸ்தூலபத்திரர்

E) விடை தெரியவில்லை

**118)** எண்ணாயிரம் எனும் கிராமத்தில் வேதக் கல்லூரி ஒன்றை நிறுவியவர்?

A) முதலாம் ராஜேந்திரன்

B) முதலாம் இராஜராஜன்

C) அதிராஜேந்திரன்

D) இரண்டாம் இராசராசன்

E) விடை தெரியவில்லை

**119)** திராவிட கருத்தாக்கத்துக்கு எதிர்நிலையில் இருந்த தென்னந்தியாவைக் களமாகக் கொண்டு, இராஜகோபாலாச்சாரி உருவாக்கிய நிலைக்கருத்தின் பெயர் என்ன?

A) ஆரிய சமாஜம் B) திராவிட சமாஜம் C) தட்சிண பிரதேசம் D) ஏதுமில்லை

E) விடை தெரியவில்லை

**120)** ஒவ்வொரு இரண்டு வருடத்திற்கும் மாநிலங்களவை உறுப்பினர்களில் எத்தனை பங்கு உறுப்பினர்கள் தங்களது பதவிகாலத்தை நிறைவு செய்வார்கள்?

A) இரண்டில் ஒரு பங்கு

B) ஆறில் ஒரு பங்கு

C) மூன்றில் ஒரு பங்கு

D) எட்டில் ஒரு பங்கு

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**121)** அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவருவதைப் பற்றி குறிப்பிடும் அரசியலமைப்பு உறுப்பு எது?

A) 368

B) 326

C) 362

D) 288

E) விடை தெரியவில்லை

**122)** சட்டமன்றக் குழுக்களின் தலைவர்களை நியமித்து அவர்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுபவர் யார்?

A) குடியரசுத்தலைவர்

B) முதலமைச்சர்

C) ஆளுநர்

D) சபாநாயகர்

E) விடை தெரியவில்லை

**123)** குடியரசுத்தலைவரின் தகுதி மற்றும் தேர்தல் ஆகியவற்றைப் பற்றி தெரிவிக்கும் அரசமைப்பின் உறுப்பு எது?

A) 55

B) 56

C) 57

D) 58

E) விடை தெரியவில்லை

**124)** குடியரசுத்தலைவருக்கு எதிரான கண்டனத்தீர்மானத்தை ஏதேனும் ஒரு அவையில் எத்தனை நாட்களுக்கு முன் அறிவிக்க வேண்டும்?

A) 30

B) 28

C) 14

D) 21

E) விடை தெரியவில்லை

**125)** பின்வரும் எதற்கு குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் இல்லை?

A) நிதி மசோதாக்களை திருப்பியனுப்புதல் & மறுதலித்தல்

B) நாடாளுமன்றத்தின் முன்வரைவுக்கு ஒப்புதல் பெறும்பொருட்டு ஈரவைகளின் கூட்டுக் கூட்டத்தை அழைத்தல்

C) நாடாளுமன்றத்தை கூட்ட, உரையாற்ற & ஒத்திவைக்க

D) மாநிலச் சட்டங்களை மறுதலிக்க

E) விடை தெரியவில்லை

**126)** பொதுவாக, பொதுப் பட்டியலில் உள்ள விஷயங்களில் நிர்வாக அதிகாரத்தை பெற்றிருப்பது?

A) மத்திய அரசு

B) மாநிலங்கள்

C) குடியரசுத்தலைவர்

D) மாநிலங்களவை

E) விடை தெரியவில்லை

**127)** மாநிலங்களுக்கிடையேயான குழுவின் தலைவராக இருப்பவர் யார்?

A) குடியரசுத்தலைவர்

B) குடியரசுத் துணைத்தலைவர்

C) பிரதமர்

D) மத்திய உள்துறை அமைச்சர்

E) விடை தெரியவில்லை

**128)** நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இந்தியாவில் நடைமுறைக்கு வந்தது எப்போது?

A) டிசம்பர் 24, 1986

B) நவம்பர் 13, 1986

C) ஜனவரி 1, 1987

D) பிப்ரவரி 10, 1987

E) விடை தெரியவில்லை

**129)** வேதாரண்யம் உப்பு சத்தியாகிரக இயக்கத்தில் சிறை சென்ற மற்றும் அபராதம் கட்டிய முதல் பெண்மணி யார்?

A) அம்புஜத்தம்மாள்

B) முத்துலட்சுமி அம்மையார்

C) ருக்மிணி லட்சுமிபதி

D) பத்மாசினி அம்மையார்

E) விடை தெரியவில்லை

**130)** பண்டைய தமிழகத்தில் விதிக்கப்பட்ட பல்வேறு வகையான வரிகளைப் பற்றி கூறும் பத்துப்பாட்டு நூல்?

A) மதுரைக்காஞ்சி

B) முல்லைப்பாட்டு

C) பட்டினப்பாலை

D) நெடுநல்வாடை

E) விடை தெரியவில்லை

**131)** திருக்குறளில் குறிப்பிடப்பட்டிருக்கும் மதம் எது?

A) சமணம்

B) பௌத்தம்

C) ஆசீவகம்

D) எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

**132)** சென்னை மாகணத்தில் தொழிலாளர் அமைப்புகளை ஏற்படுத்துவதில் முன்னோடியாக இருந்தவர்?

A) எஸ்.ஏ. டாங்கே

B) லட்சுமி நரசு

C) டாக்டர் நடேசனார்

D) ம.சிங்காரவேலர்

E) விடை தெரியவில்லை

**133)** எதுவும் நிறைவேறாமல் போனாலும், எது ஒன்றே "திராவிடர் கழகத்தின் லட்சிய வெற்றியாக" இருக்கும் என்று பெரியார் விரும்பினார்?

A) சாதி ஒழிப்பு

B) திராவிட நாடு

C) சடங்குகளற்ற திருமணம்

D) பெண்களுக்கு சொத்துரிமை

E) விடை தெரியவில்லை

**134)** "கூடல்ஊர் ஆகோள் பெடு தியன் அந்தவன் கல்" என்ற செய்திகள் காணப்படும் நடுகல் கண்டெடுக்கப்பட்ட இடம் எது?

A) புலிமான்கோம்பை

B) தாதப்பட்டி

C) பொற்பனைக்கோட்டை

D) ஏதுமில்லை

E) விடை தெரியவில்லை

**135)** தென்னிந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் இருந்த வணிகர்கள் குறித்தும் குதிரை வணிகர்கள் குறித்தும் குறிப்பிடும் இலங்கை நூல் எது?

A) மகாவம்சம் B) புத்தவம்சம் C) மகாயானவம்சம் D) விக்கிரமவம்சம்

E) விடை தெரியவில்லை

**136)** பண்டைய இஸ்ரேல் அரசர் சாலமோன் முத்துக்களை ______ என்னுமிடத்திலிருந்து இறக்குமதி செய்தார்?

A) தொண்டி

B) முசிறி

C) தாண்டலம்

D) உவரி

E) விடை தெரியவில்லை

**137)** தனித் தமிழ் இயக்கம் தொடங்கப்பட்டது எப்போது?

A) 1956

B) 1936

C) 1916

D) 1906

E) விடை தெரியவில்லை

**138)** சட்டநாதன் ஆணயத்தின் பரிந்துரையின்படி 1971 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டு வரம்பு எத்தனை சதவீதமாக மாற்றியமைக்கப்பட்டது?

A) 28

B) 31

C) 34

D) 37

E) விடை தெரியவில்லை

**139)** தமிழ்நாட்டில், ரௌலட் சட்டம் எனும் கருப்புச் சட்டத்தை எதிர்த்து கடையடைப்பும் வேலை நிறுத்தங்களும் நடத்தப்பட்ட நாள் எது?

A) 1919 மார்ச் 28

B) 1919 ஏப்ரல் 6

C) 1919 ஜூன் 4

D) 1919 மே 12

E) விடை தெரியவில்லை

**140)** வைக்கம் போராட்டத்திற்குப்பின் ஈரோடு திரும்பியதும், எதைப் பற்றி பேசியதற்காக பெரியார் கைது செய்யப்பட்டார்?

A) கள்ளுக்கடை மறியல்

B) கதர் விற்பனை முன்னேற்றம்

C) வகுப்புவாரி பிரதிநித்துவம்

D) பிராமணர் அல்லாதோர் உரிமை

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**141)** வேலை வாய்ப்புகளில், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மை மதத்தினருக்கு உரிய பிரதிநித்துவம் வேண்டிசர்.பி. தியாகராயர் எழுதி வெளியிட்ட அறிக்கை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) பிற்படுத்தப்பட்டோர் அறிக்கை

B) தாழ்த்தப்பட்டோர் அறிக்கை

C) சிறுபான்மையினர் அறிக்கை

D) பிராமணரல்லாதோர் அறிக்கை

E) விடை தெரியவில்லை

**142)** முதல் வகுப்புவாரி தீர்மானத்தை முனிசாமி அவர்கள் கொண்டுவந்தபோது, அதை முன்மொழிந்தவர் மற்றும் வழிமொழிந்தவர் முறையே?

A) சர். ஆர். கே. சண்முகம், டாக்டர் நடேசனார்

B) டாக்டர் நடேசனார், டி.எம். நாயர்

C) டாக்டர். சி. நடேசனார், சர்.ஆர்.கே சண்முகம்

D) டி.எம். நாயர், டாக்டர் நடேசனார்

E) விடை தெரியவில்லை

**143)** மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு மத்திய அரசின் வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27% சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கி ஆணை பிறப்பித்த அரசு?

A) இந்திராகாந்தி அரசு

B) மொராஜி தேசாய் அரசு

C) ஐ.கே. குஜரால் அரசு

D) வி.பி. சிங் அரசு

E) விடை தெரியவில்லை

**144)** சுகாதார குறியீட்டில் தற்போது தமிழகம் வகிக்கும் இடம்?

A) முதலாவது

B) இரண்டாவது

C) ஒன்பதாவது

D) மூன்றாவது

E) விடை தெரியவில்லை

**145)** தமிழக அரசால், குடும்பநல இயக்ககம் துவங்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1923 B) 1966 C) 1954 D) 1956

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**146)** 2019-20 ஆம் கல்வியாண்டில் தமிழ்நாட்டின் மொத்த உயர்கல்வி சேர்க்கை விகிதம் என்ன?

A) 51.4%

B) 52.8%

C) 59.1%

D) 50.6%

E) விடை தெரியவில்லை

**147)** தென்னிந்தியாவின் ஜான்சி ராணி என்று காந்தியடிகளால் அழைக்கப்பட்டவர் யார்?

A) அஞ்சலை அம்மாள்

B) துர்காபாய் தேஷ்முக்

C) அம்புஜத்தம்மாள்

D) ருக்மணி லெட்சுமிபதி அம்மையார்

E) விடை தெரியவில்லை

**148)** "கள்ளுக்கடை மறியல் போராட்டத்தை நிறுத்தி விடுவது என்பது என் கையில் இல்லை, அது ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்களிடம் தான் இருக்கிறது" என்று காந்தி கூறிய அந்த இரு பெண்மணிகள் யார்?

A) பத்மாசினி அம்மையார் & நாகம்மையார்

B) நாகம்மையார் & கோமதி அம்மையார்

C) நாகம்மையார் & கண்ணம்மாள்

D) நாகம்மையார் & அலமேலு அம்மையார்

E) விடை தெரியவில்லை

**149)** தமிழகத்தின் மிகப்பெரிய பழங்குடியின மக்கள் யார்?

A) குரும்பர்கள்

B) கோடாக்கள்

C) படுகர்கள்

D) இருளர்கள்

E) விடை தெரியவில்லை

**150)** 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் கல்வியறிவு விகிதம் எவ்வளவு?

A) 84.04%

B) 79.84%

C) 74.04%

D) 80.74%

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**151)** தமிழ்நாட்டின் வருடாந்திர மழையளவில் எத்தனை சதவீதம் மழை வடகிழக்குப் பருவக்காற்று காலத்தில் கிடைக்கிறது?

A) 48%

B) 35%

C) 50%

D) 25%

E) விடை தெரியவில்லை

**152)** தமிழ்நாட்டின் எப்பகுதில் குறிப்பிடத்தக்க அளவில் உவர் மண் காணப்படுகிறது?

A) வேதாரண்யம்

B) ராஜபாளையம்

C) நாகப்பட்டினம்

D) கன்னியாகுமரி

E) விடை தெரியவில்லை

**153)** மாநில உள்நாட்டு மீன் உற்பத்தியில் 10 சதவீத உற்பத்தியுடன் முன்னிலையில் உள்ள மாவட்டம் எது?

A) திருப்பூர்

B) கன்னியாகுமரி

C) வேலூர்

D) திருவண்ணாமலை

E) விடை தெரியவில்லை

**154)** ______ அணையில் அமைந்துள்ள தோட்டம் சிறிய பிருந்தாவனம் அழைக்கப்படுகிறது

A) பரம்பிக்குளம் ஆழியாறு நீர்த்தேக்கம்

B) வைகை அணை

C) பாபநாசம் அணை

D) சாத்தனூர் அணை

E) விடை தெரியவில்லை

**155)** பண்டங்கள் மற்றும் பணிகள் வரியானது என்று முதல் அமல்படுத்தப்பட்டது?

A) மார்ச் 29, 2017

B) ஜூன் 1, 2017

C) ஜூலை 1, 2017

D) ஆகஸ்ட் 1, 2017

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**156)** ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் ஏற்படும் தேய்மானத்தை கழித்த பிறகு கிடைக்கும் நிகர உற்பத்தி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)

B) நிகர தேசிய உற்பத்தி (NNP)

C) நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

**157)** 1956 தொழிற்கொள்கை தீர்மானம் பின்வரும் யாருடைய வளர்ச்சி மாதிரியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது

A) ஜெவகர்லால் நேரு

B) ஜே.சி. குமரப்பா

C) எம்.எஸ். சுவாமிநாதன்

D) மகலநோபிஸ்

E) விடை தெரியவில்லை

**158)** பண்டங்கள் மற்றும் பணிகள் வரியின் குறிக்கோள் வாக்கியம் எது?

A) ஒரே வரி

B) ஒரே நாடு - ஒரே வரி

C) ஒரே அங்காடி - ஒரே வரி

D) ஒரு நாடு-ஒரு அங்காடி-ஒரு வரி

E) விடை தெரியவில்லை

**159)** கீழ்க்காணும் எந்த முறையில் கிராம மக்களாலானக் குழுவினர் நிலச்சொந்தக்காரர்களாக இருந்து நிர்வாகம் செய்தனர்?

A) ஜமீன்தாரி முறை

B) மஹல்வாரி முறை

C) இரயத்துவாரி முறை

D) இவை எதுவும் அல்ல

E) விடை தெரியவில்லை

**160)** இந்தியாவில் அரசாங்கத்தினால் எத்தனை அடுக்குகள் வரி வசூலிக்கப்படுகிறது?

A) ஒரே அடுக்கில்

B) இரண்டு அடுக்குகளில்

C) மூன்று அடுக்குகளில்

D) நான்கு அடுக்குகளில்

E) விடை தெரியவில்லை

**161)** பூகம்பத்தை அளவிடப் பயன்படுவது?

A) அனிமாமீட்டர்

B) சிஸ்மோக்ரா.்ப்

C) குவார்ட்ஸ் கடிகாரம்

D) பைரோமீட்டர்

E) விடை தெரியவில்லை

**162)** காவிரி-குண்டாறு திட்டத்தால் பயனடையும் மாவட்டம்?

A) கடலூர்

B) விருதுநகர்

C) ராமநாதபுரம்

D) விழுப்புரம்

E) விடை தெரியவில்லை

**163)** ஆக்சிஜனேற்ற வினைகளில் வினையூக்கியாகவும் ராக்கெட்டுகளில் எரிபொருளாகவும் பயன்படுவது?

A) அம்மோனியம் நைட்ரேட்

B) நைட்ரிக் ஆக்சைடு

C) நைட்ரஸ் ஆக்சைடு

D) நட்ரஜன் டை ஆக்சைடு

E) விடை தெரியவில்லை

**164)** தமிழ்ப்பண்பாட்டின் வேர்களைத் தேட இந்தியாவின் பிறமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் பல இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அவற்றுள் கர்நாடகாவின் எப்பகுதியில் ஆய்வு நடைபெற உள்ளது?

A) வெங்கி B) தலைக்காடு C) பாலூர் D) பட்டணம்

E) விடை தெரியவில்லை

**165)** பாரதியார் பிறந்த நாளான செப்டம்பர் 11 மகாக்கவிநாளாகக் கொண்டாடப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. அதன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் எவ்விருது வழங்கப்பட உள்ளது?

A) மகாக்கவி பாரதி விருது

B) பாரதி கவிஞர் விருது

C) பாரதி இளம் கவிஞர் விருது

D) மகாக்கவி பாரதி கவி விருது

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**166)** இந்நோய் ஒரு வயதுக்கு குறைவான குழந்தைகளைத் தாக்கும். இந்நோய் தாக்குதலுக்கு உள்ளான குழையின் தலை பெரியதாகவும், கை கால்கள் மெலிந்து குச்சி போன்றும், மூளை வளர்ச்சி குன்றியும் காணப்படும்.

A) குவாஷியோர்கர்

B) ரிக்கெட்ஸ்

C) ஹீமோபிலியா

D) மராஸ்மஸ்

E) விடை தெரியவில்லை

**167)** கால்சியம் குறைபாட்டால் வரும் நோய்களில் சேராதது எது?

A) பற்சிதைவு

B) ஆஸ்டியோமலேசியா

C) அனீமியா

D) ரிக்கெட்ஸ்

E) விடை தெரியவில்லை

**168)** எவ்வைட்டமின் குறைபாட்டால் பெரிபெரி நோய் தாக்குகிறது?

A) வைட்டமின் பி1

B) வைட்டமின் பி2

C) வைட்டமின் பி5

D) வைட்டமின் பி6

E) விடை தெரியவில்லை

**169)** கழிவுநீக்க மண்டலத்தின் அடிப்படை அலகு?

A) நியூரான்

B) நெஃப்ரான்

C) சார்க்கோமியர்

D) மேற்கண்ட எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

**170)** சிதைவடையும் குப்பையிலிருந்து வெளியேரும் வாயு?

A) ஈத்தேன் B) ஈதர்

C) மீத்தேன் D) புரோபேன்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**171)** கார்பனின் புறவேற்றுமை வடிவங்களில் சேராதது?

A) படிக வடிவம் உடையவை

B) படிக வடிவம் அற்றவை

C) பாலிகோணல்

D) ஃபுல்லரின்

E) விடை தெரியவில்லை

**172)** செயற்கை வைரங்கள் தயாரிக்கப் பயன்படுவது?

A) நிலக்கரி

B) கிராபைட்

C) ஃபுல்லரின்

D) கீட்டோன்

E) விடை தெரியவில்லை

**173)** தமிழக சட்டப்பேரவையில் துபாஷியாக நியமிக்கப்பட்டுள்ள முதல் பெண்?

A) இராஜலட்சுமி

B) மகேஸ்வரி

C) திவ்யா ஆறுமுகம்

D) சௌமியா அன்பானந்தம்

E) விடை தெரியவில்லை

**174)** நாட்டிலேயே கார்பன் - நியூட்ரல் விவசாய முறைகளை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம்?

A) கேரளா

B) பஞ்சாப்

C) தமிழ்நாடு

D) கர்நாடகா

E) விடை தெரியவில்லை

**175)** மத்திய அரசின் நீர் மேலாண்மைத் திட்டத்தில் சிறப்பாக செயல்பட்டதற்காக தமிழ்நாட்டிற்கு எத்தனை தேசிய விருதுகள் கிடைத்துள்ளன?

A) 6

B) 4

C) 2

D) 8

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**176)** வது கேள்வி

ஒரு வகுப்பில் 12 மாணவர்களின் சராசரி உயரம் 152 செ.மீ எனக் கணக்கிடப்பட்டது. சரிபார்க்கும் போது 172 செ.மீ என்பதை 148 செ.மீ என தவறாக எடுத்துக் கொள்ளப்பட்டதாக தெரிய வந்தது எனில் சரியான சராசரி உயரம் யாது?

(A) 150 செ.மீ
(B) 156 செ.மீ
(C) 158 செ.மீ
(D) 154 செ.மீ

**177)** வது கேள்வி

இரண்டு மிகை எண்களின் வர்க்கங்களின் வித்தியாசம் 45. சிறிய எண்ணின் வர்க்கம் ஆனது பெரிய எண்ணின் நான்கு மடங்கிற்குச் சமம் எனில் அந்த எண்களைக் காண்க

(A) 3 and 15
(B) 9 and 5
(C) 3 and 16
(D) 9 and 6

**178)** வது கேள்வி

மாட்டு வண்டிச் சக்கரத்தின் ஆரம் 35 செ.மீ. அது 154 மீ தொலைவு கடந்தால், அச்சக்கரம் எத்தனை முழுச்சுற்றுகள் சுற்றியிருக்கும்?

(A) 70
(B) 189
(C) 119
(D) 86

**179)** வது கேள்வி

சரண் என்பவரின் வயது தன் மகன் சங்கரின் வயதைப் போல 6 மடங்கு. 4 வருடங்கள் கழித்து அவரின் வயது மகன் வயதைப் போல 4 மடங்கு எனில், அவர்களின் தற்போதைய வயது என்ன?

(A) 30, 5
(B) 36, 6
(C) 48, 8
(D) 24, 4

**180)** வது கேள்வி

$0.\overline{35}$ என்ற எண்ணை பின்னமாக மாற்றுக

(A) $\frac{35}{99}$ (B) $\frac{35}{100}$

(C) $3\frac{5}{10}$ (D) $\frac{35}{1000}$

**181)** வது கேள்வி

200 க்கும் 300 க்கும் இடையே 6, 8 மற்றும் 9 ஆகிய எண்களால் வகுபடக் கூடிய எண்கள் எத்தனை உள்ளன?

(A) ஒன்று

(B) இரண்டு

(C) மூன்று

(D) நான்கு

**182)** வது கேள்வி

A என்பவர் ஒரு வேலையை 20 நாட்களிலும், B என்பவர் அதே வேலையை 30 நாட்களிலும் செய்து முடிப்பார்கள். அவ்விருவரும் சேர்ந்து அவ்வேலையைச் செய்து முடிக்க எத்தனை நாட்கள் ஆகும்?

(A) 10 நாட்கள்

(B) 12 நாட்கள்

(C) 11 நாட்கள்

(D) 20 நாட்கள்

**183)** வது கேள்வி

14 அச்சுக் கோர்ப்பவர்கள், 5 மணி நேரத்தில் ஒரு புத்தகத்தின் 70 பக்கங்களை முடிப்பர். 10 மணி நேரத்தில், 100 பக்கங்களை முடிக்க எத்தனை அச்சுக் கோர்ப்பவர்கள் தேவை?

(A) 12 (B) 10

(C) 8 (D) 7

**184)** வது கேள்வி

₹ 7,500 க்கு 8% வட்டி வீதம் ஒரு வருடம் 6 மாதங்களுக்கான தனி வட்டியைக் காண்க.

(A) ₹ 600 (B) ₹ 700

(C) ₹ 800 (D) ₹ 900

**185)** வது கேள்வி

கிரிக்கெட் வீரர் டோனியின் முதல் 30 ஆட்டங்களுக்கான சராசரி ஓட்டம் (runs) 72 எனக் கணக்கிடப்பட்டிருந்தது. 31 வது ஆட்டம் நடைபெற்ற பின் அவருடைய சராசரி ஓட்டம் 73 ஆக உயர்ந்தது எனில் 31 ஆவது ஆட்டத்தில் அவர் எடுத்திருந்த ஓட்டங்கள் (runs) எத்தனை?

(A) 100 (B) 103

(C) 74 (D) 108

**186)** வது கேள்வி

ஏறு வரிசையில் எழுதுக $\frac{3}{4}, \frac{1}{2}, \frac{5}{8}$

(A) $\frac{1}{2}, \frac{5}{8}, \frac{3}{4}$ (B) $\frac{1}{2}, \frac{3}{4}, \frac{5}{8}$

(C) $\frac{3}{4}, \frac{5}{8}, \frac{1}{2}$ (D) $\frac{3}{4}, \frac{1}{2}, \frac{5}{8}$

**187)** வது கேள்வி

T – 20 மட்டைப்பந்து போட்டியில் ராசு 50 பந்துகளை எதிர் கொண்டு 10 முறை "ஆறு" ஓட்டங்களை எடுத்தார். அவர் எதிர்கொண்ட பந்துகளில் ஒரு பந்தை சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கும் போது அதில் அவர் "ஆறு" ஓட்டங்கள் எடுக்காமல் இருப்பதற்கான நிகழ்தகவு என்ன?

(A) $\frac{1}{5}$ (B) $\frac{4}{5}$

(C) $\frac{6}{5}$ (D) $\frac{3}{5}$

**188)** வது கேள்வி

ஒரு குறிப்பிட்ட வாரத்தில் நகரத்தின் அதிகபட்ச வெப்பநிலை 34.8°C, 38.5°C, 33.4°C, 34.7°C, 35.8°C, 32.8°C, 34.3°C ஆக இருந்தது. அந்த வாரத்தின் சராசரி வெப்பநிலையைக் காண்க.

(A) 34.8°C

(B) 34.9°C

(C) 34.7°C

(D) 35.2°C

**189)** வது கேள்வி

ஒரு குழுவில் 100 பேர் உள்ளனர், அவர்களின் உயரங்களின் கூட்டுச்சராசரி 163.8 செ.மீ மற்றும் மாறுபாட்டுக்கெழு 3.2 எனில், அவர்களுடைய உயரங்களின் திட்ட விலக்கத்தைக் காண்க.

(A) 3.23

(B) 4.91

(C) 5.24

(D) 6.38

**190)** வது கேள்வி

ரீணா மற்றும் உஷாவின் தற்போதைய வயதுகள் முறையே 24 வருடங்கள் மற்றும் 36 வருடங்கள் எனில் 8 ஆண்டுகளுக்கு முன்பு உஷா மற்றும் ரீணாவின் வயதுகளின் விகிதம் என்னவாக இருந்திருக்கும்?

(A) 7 : 4 (B) 6 : 5

(C) 2 : 3 (D) 4 : 7

**191)** வது கேள்வி

சுருக்குக : $\dfrac{(3^3)^{-2} \times (2^2)^{-3}}{(2^4)^{-2} \times 3^{-4} \times 4^{-2}}$

(A) $7\frac{2}{9}$ (B) $9\frac{2}{7}$

(C) $7\frac{1}{9}$ (D) $9\frac{1}{7}$

**192)** வது கேள்வி

ஒரு கனச் சதுரத்தின் மொத்த வளைபரப்பு 384 $m^2$ எனில் அதன் பக்கம் எவ்வளவு

(A) 3 மீ (B) 8 மீ

(C) 4 மீ (D) 6 மீ

**193)** வது கேள்வி

$3(a-1),\ 2(a-1)^2,\ (a^2-1)$—ன் மீச்சிறு பொது மடங்கு காண்க.

(A) $(a+1)^2(a+1)$ (B) $(a-1)^2(a+1)$

(C) $6(a-1)(a+1)^2$ (D) $6(a-1)^2(a+1)$

**194)** வது கேள்வி

$1\frac{61}{64}$—ன் முப்படி மூலம் காண்

(A) $\frac{5}{8}$ (B) $\frac{3}{7}$

(C) $\frac{5}{4}$ (D) $\frac{8}{5}$

**195)** வது கேள்வி

இரண்டு உருளைகளின் உயரங்கள் முறையே 1 : 2 மற்றும் அவற்றின் ஆரங்கள் முறையே 2 : 1 ஆகிய விகிதங்களிலிருப்பின், அவற்றின் கன அளவுகளின் விகிதம்

(A) 4 : 1 (B) 1 : 4

(C) 2 : 1 (D) 1 : 2

ETW ACADEMY

**196)** வது கேள்வி

ஒரு தொகையானது தனிவட்டி முறையில் 10 வருடத்தில் இரட்டிப்பாக ஆக வட்டி வீதம் என்னவாக இருக்க வேண்டும்

(A) 10% (B) 20%

(C) 50% (D) 25%

**197)** வது கேள்வி

ஒரு பெருக்குத் தொடர்வரிசையில் $t_2 = \frac{3}{5}$ மற்றும் $t_3 = \frac{1}{5}$ எனில் பொது விகிதம் காண்க.

(A) $\frac{1}{5}$ (B) $\frac{1}{3}$

(C) 1 (D) 5

**198)** வது கேள்வி

$a_1 = -1$ மற்றும் $a_n = \frac{a_{n-1}}{n+2}, n > 1 \ \forall n \in N$ எனில் $a_2, a_3$ காண்க.

(A) $\frac{1}{4}, \frac{1}{20}$ (B) $\frac{-1}{4}, \frac{1}{20}$

(C) $\frac{1}{4}, \frac{-1}{20}$ (D) $\frac{-1}{4}, \frac{-1}{20}$

**199)** வது கேள்வி

$1+2+3+\cdots+n = K$ எனில் $1^3 + 2^3 + \cdots + n^3$ என்பது

(A) $K^2$ (B) $K^3$

(C) $\frac{K(K+1)}{2}$ (D) $(K+1)^3$

**200)** வது கேள்வி

$a^{m-n}, a^m, a^{m+n}$ என்ற பெருக்குத் தொடர் வரிசையின் பொது விகிதம்

(A) $a^m$ (B) $a^{-m}$

(C) $a^n$ (D) $a^{-n}$

***

© ETW Academy

ETW ACADEMY